Judicial Form No. 53
[See Rule 42]
DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
.............

நீதித்துறை நடுவர் நீதிமன்றம், அரூர்

**வழக்கு எண். CC 129/2014**

வழக்கு சாட்சி எண். PW28

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | Dr.கிருஷ்ணகுமார் | கிராமம் | : | அரூர் |
| தந்தை பெயர் | : | சின்னுசாமி | தாலுக்கா | : | அரூர் |
| வயது | : | 45 | மாவட்டம் | : | தருமபுரி |

(எதிரிகள் ஆஜர் இல்லை. எதிரி சார்பில் பா.நி.சு.சா. பிரிவு - 355ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது).

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 16**th** Day of **July 2026.**

**முதல் விசாரணை**

நான் தற்போது அரூர் தனியார் குழந்தைகள் நல மருத்துவராக பணிபுரிந்து வருகிறேன்.

கடந்த 01.09.2011ம் தேதியன்று மாலை 5 மணிக்கு பாதிக்கப்பட்ட நபர்கள் கோட்டப்பட்டியில் இருந்து பாதிக்கப்பட்ட நபர்கள் ஈச்சர் வண்டியில் பயணிக்கும் போது ஆண்டியூர் அருகே வண்டி கவிழ்ந்து விபத்து ஏற்பட்டதனால் சிகிச்சைப்பெற அரூர் அரசு மருத்துவமனைக்கு அழைத்து வரப்பட்டனர். காயமுற்ற நபர்கள் பலர் மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக வந்தார்கள் அதில் நான் கீழ் கண்ட நபர்களுக்கு

சிகிச்சை அளித்து அவர்களுக்கு காயச்சான்று வழக்கினேன்.

(1) பெருமாயி க/பெ குப்பன் என்பவர் சிகிச்சைக்காக வந்தார். அவரை பரிசோதனை செய்தததில் (1) தலையில் காயம் ஏற்பட்டு மூக்கின் வழியாக ரத்தம் வந்தது. மேற்படி நபரை சிகிச்சை அளித்து, மேல் சிகிச்சைக்காக தருமபுரி அரசு மருத்துவகல்லூரி மற்றும் மருத்துவமனைக்கு அனுப்பி அங்கு அவர் அனுமதிக்கப்பட்டு முன் தலையில் எலும்பு முறிவு ஏற்ப்பட்டதாக சிகிச்சை அளித்தனத். மேற்படியான காயம் கொடுங்காயம் என சான்றிதழ் அளிக்கப்பட்து. **காயச்சான்றிதழ் அசாஆ-20 ஆக குறியீடுசெய்யப்படுகிறது.**

**(2) ஏழுமலை** த/பெ தங்கவேல், காயங்கள் (1) தலையில் 4x2 cm நீள கிழிந்த காயம் காணப்பட்டது. 2. கால்களில் சிறுசிறு சிறாய்ப்பு காயம் காணப்பப்ட்டது. மேற்படி காயங்களுக்கு சிகிச்சை அளித்து. சாதாரண காயம் என சான்று அளித்துள்ளோம். **காயச்சான்றிதழ் அசாஆ-21 ஆக குறியீடுசெய்யப்படுகிறது.**

**(3) தனபால்** த/பெ முனியன், காயங்கள் உடலில் பல்வேறு இடங்களில் சிறுசிறு சிறாய்ப்பு காயங்கள் காணப்பப்ட்டது. மேற்படி காயங்களுக்கு சிகிச்சை அளித்து. சாதாரண காயம் என சான்று அளித்துள்ளோம். **காயச்சான்றிதழ் அசாஆ-22 ஆக குறியீடுசெய்யப்படுகிறது.**

**(4) சென்னம்மாள்** க/பெ தனபால், காயங்கள் (1) தலையில் ஆழமான வெட்டு காயம் ஏற்பட்டு இருந்தது. மேற்படி நபரை சிகிச்சை அளித்து, மேல் சிகிச்சைக்காக தருமபுரி அரசு மருத்துவகல்லூரி மற்றும் மருத்துவமனைக்கு அனுப்பி அங்கு அவர்

அனுமதிக்கப்பட்டார்.ஆனால் மருத்துவரின் அறிவுரையை மீறி சென்றதால் காயத்தின் தன்மை குறித்த சான்று வழங்க இயலவில்லை.

(5) **வசந்தா** க/பெ முனியன், காயங்கள் (1) உடம்பில் பல்வேறு இடங்களில் ஊமைக்காயம் ஏற்பட்டு இருந்தது. மேற்படி காயங்களுக்கு சிகிச்சை அளித்து. சாதாரண காயம் என சான்று அளித்துள்ளோம். **காயச்சான்றிதழ் அசாஆ-23 ஆக குறியீடுசெய்யப்படுகிறது.**

(6) **சங்கர்** த/பெ காசிநாதன், காயங்கள் உடம்பில் பல்வேறு இடங்களில் சிறாய்ப்பு காயங்கள் ஏற்பட்டு இருந்தது. மேற்படி காயங்களுக்கு சிகிச்சை அளித்து. சாதாரண காயம் என சான்று அளித்துள்ளோம். **காயச்சான்றிதழ் அசாஆ-24 ஆக குறியீடுசெய்யப்படுகிறது.** வழக்கு தொடர்ந்த போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் கொடுத்த காயச்சான்றிதழ்கள் உரிய படிவத்தில் கொடுக்கவில்லை என்றால் சரிதான். கொடுங்காயம் என சான்றழிக்கப்பட்ட நபரின் நுண்கதிர் படங்களை நான் பார்க்கவில்லை என்றால் அந்த நபருக்கு சிகிச்சை அளித்தவர் கொடுத்த மருத்தவரின் அறிக்கையின் அடிப்படையில் நான் காயச்சான்றிதழ் வழங்கினேன். மேற்படி காயச்சான்றிதழில் விபத்து பற்றிய விவரங்கள் ஏதும் இல்லை என்றால் அது விபத்து பதிவேட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது.

**மறுவிசாரணை இல்லை.**

**மேற்படி சாட்சியம் என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டு, பதிவு செய்யப்பட்ட சாட்சியம் சாட்சிக்கு படித்துக்காட்டி அவர் சரி என ஒப்புக்கொண்டு என் முன்னர் கையொப்பம் செய்தார்.**

**நீதித்துறை நடுவர் அளூர்.**